# தி/கிண்/இஹ்ஸானியா பெண்கள் வித்தியாலயம்

## முதலாம் தவணைப்பரீட்சை - 2020

| தரம் : 10 | புவியியல் I | நேரம் : 01 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண் : | | புள்ளி : |

- **கவனிக்க.**
- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.
- ❖ சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

**வினாத்தாள் – I**

❖ ***01 முதல் 10 வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள்ளே இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டில் எழுதுக.***

*(01)* ஞாயிற்றுத் தொகுதியில் உயிரினங்கள் வாழக்கூடிய ஒரே ஒரு கோள் ..... ஆகும். *(புவி / செவ்வாய் / வெள் ளி)*

*(02)* நீர்க்கோளத்தில் உள்ள நீர் நிலைகளிலிருந்து ..... மூலம் வளிமண்டலத்தை சேர்கின்றது. *(ஆவியாக்கம் / ஆவியுயிர்ப்பு / படிவுவீழ்ச்சி)*

*(03)* ..... படை சிலிக்காவையும், மக்னீசியத்தையும் கொண்டிருக்கின்றது. *(மூடி/ சீயல் / சீமா)*

*(04)* அதிகளவு நீர்ப்பரப்பைக் கொண்டுள்ள தகடு ..... ஆகும். *(அந்தாட்டிக்கா / பசுபிக்/ இந்தோஅவுஸ்ரேலியா)*

*(05)* *1 : 50 000* இடவிளக்கவியல் படங்களில் 1km தூரம் ..... cm காட்டும். **(2 cm / 4 cm / 6 cm)**

(06) வெப்ப நழுவுவீதம் இடம்பெறும் வளிமண்டல படை ..... ஆகும். (படை மண்டலம், மாறன் மண்டலம், இடைமண்டலம்)

(07) புவிமேற்பரப்பு ..... சதுர கிலோமீற்றர்களாகும். (510 , 500 , 516)

(08) ஓசோன் படை ..... படையில் அமைந்துள்ளது. (இடைமண்டலம் , படை மண்டலம், மாறன்மண்டலம்)

(09) சமுத்திர தகடுகளில் ஒன்றாக ..... காணப்படுகிறது. (பசுபிக் தகடு, அந்தாட்டிக் தகடு, ஆபிரிக்க தகடு)

(10) மொஹோரோவிச் கோடு அமைந்திருப்பது ..... (புவியோட்டுக்கும் கோளவகத்தகட்டுக்குமிடையே, புவியோட்டுக்கும் இடையோட்டுக்குமிடையே, இடையோட்டுக்கும் கோளவகத்தகட்டுக்குமிடையே)

www.ikedu.lk

**• 11 – 20 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் 'சரி' ஐயும், பிழையாயின் 'பிழை' ஐயும் சுற்றி வட்டமிடுக.**

11 *மொசப்பத்தேமிய மக்கள் தாம் வாழ்ந்த பிரதேசத்தினை களிமண்ணைக் கொண்டு அமைத்த படத்தின் மூலம் அடையாளப்படுத்தினர்* *(சரி/பிழை)*

12. உலகின் மிகஉயரத்தில் அமைந்திருக்கும் மேட்டுநிலமாக தக்கனமேட்டுநிலம் காணப்படுகிறது.

(சரி/ பிழை)

13. புவியின் கட்டமைப்பிலே மேற்பரப்பில் காணப்படுவது இடையோடு ஆகும். (சரி / பிழை)

14. றைன் நதியானது பனிக்கட்டி உருகிய நீரினாலேயே உருவாகின்றது. (சரி / பிழை)

15. புவியின் மத்திய கோட்டில் இருந்து வடக்கே 23½0 பாகையில் யில் அமைந்திருக்கும் கோடு மரக கோடு ஆகும். (சரி / பிழை)

16. படை மண்டலத்தில் தரையுயர்ச்சிக்கேற்ப வெப்பநிலை அதிகரித்துச் செல்லும். (சரி / பிழை)

17. மூடியினுள் இடம்பெறும் அகவிசை தொழிற்பாடுகள் காரணமாக தகடுகள் அசையும். (சரி / பிழை)

18. உயிர்க்கோளத்தில் தாவரங்கள் - விலங்குகளிடையே இணை தொடர்பு காணப்படுகிறது. (சரி / பிழை)

19. கடலுடன் இணையும் உள்நாட்டு கடலுக்கு உதாரணம் அராபிய கடலாகும். (சரி / பிழை)

20. கண்ட ஓட்டில் அதிகமாக காணப்படும் பாறை கருங்கற்பாறையாகும். (சரி / பிழை)

**• 21 – 30 வரையான வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

21. வளிமண்டலத்தினுள் மேல் செல்லும் ஒவ்வொரு 100m களுக்கும் $0.64^0c$ வெப்பநிலை குறைந்து செல்வது ..... என அழைக்கப்படும்.

22. கடலினால் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பு ..... என அழைக்கப்படும்.

23. வளிமண்டல ஈரப்பதன் ..... என அழைக்கப்படும்.

24. கண்ட விளிம்பில் இருந்து சமுத்திர பகுதியில் காணப்படும் ஆழமற்ற கடற்பகுதி ..... .....எனப்படும்.

25. இடையோட்டையும் கோளவகத்தையும் வேறுபடுத்தும் எல்லை ..... .....ஆகும்.

26. முழுமையான தரையினால் சூழப்பட்ட பரந்த கடல்கள் ..... கடல்களாகும்.

27. *உலகின் மிகப் பெரிய பாலைவனம்* ..... ஆகும்.

28. *கற்கோளத்தில் உள்ளடங்கும் இரு பகுதிகளும்*..... ,
.....ஆகும்.

29. *புவியோட்டின் இரு பகுதிகளும்*..... ,
..... ஆகும்.

30. *வளிமண்டலம் புவியுடன் இணைந்து காணப்படுவதற்கான காரணம்*
..... ஆகும்.

www.lkedu.lk

**• *31*முதல் *40* வரையிலான வினாக்களில் 'அ' மற்றும் 'ஆ' ஆகிய இரு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவ்விரு நிரல்களுள் 'அ' நிரலுக்கேற்ப 'ஆ' நிரலைப் பொருத்தினால் வரும் சரியான விடையைக் குறித்து நிற்கும் இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

*31.*உலகின் உள்ள கண்டங்கள் 'அ' நிரலிலும், கண்டங்களில் உள்ள மலைத்தொடர்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ள ஒழுங்குகளுடன் 'ஆ' நிரலினைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| *1.* ஆசியா | (A) றொக்கி மலைத்தொடர் |
| *2.* ஆபிரிக்கா | (B) பெரிய பிரிப்பு மலைத்தொடர் |
| *3.* அவுஸ்ரேலியா | (C) இமயமலைத்தொடர் |
| | (D) டிரக்கன்பேர்க் மலைத்தொடர் |

*(1)* CBD *(2)* CDB *(3)* ABC *(4)* BCD [.....]

*32.*உலகில் உள்ள நதிகள் 'அ' நிரலிலும், அந் நதிகள் உற்பத்தியாகும் மூலங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ள ஒழுங்குகளுடன் 'ஆ' நிரலினைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| *1.* நைல் நதி | (A) உருகிய பனியிலிருந்து |
| *2.* றைன் நதி | (B) ஊற்றிலிருந்து |
| *3.* மகாவலி கங்கை | (C) ஏரியிலிருந்து |
| | (D) மலைப் பகுதியிலிருந்து |

*(1)* CAD *(2)* ACD *(3)* BCD *(4)* CDA [.....]

33. *1 : 50 000* இடவிளக்கப் படங்களில் பயன்படுத்தப்படுகின்ற குறியீடுகள் 'அ' நிரலிலும், அதற்கான நிறங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ள ஒழுங்குகளுடன் 'ஆ' நிரலினைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| *1.* சிறு வீதி | (A) பச்சை |
| *2.* நெல் | (B) மஞ்சள் |
| *3.* சமவுயரக் கோடுகள் | (C) கறுப்பு |
| | (D) கபிலம் |

*(1)* BAD *(2)* ABC *(3)* BDA *(4)* CBD [.....]

34. புவி மேற்பரப்பில் நீரின் பரம்பல் பல்வேறு அமைப்பில் பரவிக் காணப்படுகின்றது. உலகில் நீர் பரம்பியுள்ள முறை நிரல் "அ" விலும் அதன் சதவீதம் நிரல் "ஆ" விலும் தரப்பட்டுள்ளன. இரு நிரலையும் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதி.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. சமுத்திர நீர் | (A) 2.5% |
| 2. நன்னீர் | (B)20% |
| 3. தரைக் கீழ் நீர் | (C)97.5% |
| | (D) 52% |

(1)A,B,C (2)C,A,B (3) B,C,D (4) A,B,D [.....]

35. *1 : 50 000* இடவிளக்கப் படங்களில் பயன்படுத்தப்படுகின்ற குறியீடுகள் 'அ' நிரலிலும், அதற்கான நிறங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ள ஒழுங்குகளுடன்

www.tedu.lk

'ஆ' நிரலினைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. வீட்டுத்தோட்டம் | (A)நீள நிறம் |
| 2. குளம் | (B)100m |
| 3. பிரதான சமஉயரக்கோட்டின் இடைவெளி | (C)மஞ்சள் |
| | (D)20m |

(1) C,A,B (2) A,B,C (3) B,C,D (4) A,B,D [.....]

**• 36 – 40 வரையுள்ள வினாவில் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தான விடையைத் தெரிவு செய்க.**

**36.** சூரியமண்டலத்தில் சூரியனிலிருந்து புவி அமைந்திருப்பது
(1) இரண்டாவதாக (2) மூன்றாவதாக (3) நான்காவதாக (4) ஐந்தாவதாக

[.....]

37. புவியின் மேற்ரப்பு நீரில் மனித செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடிய நீரின் அளவு
(1) 1% (2) 2% (3) 2.5% (4) 1.8%

[.....]

38. மத்திய மலைநாட்டில் சிறு ஊற்றாக ஆரம்பமாகும் நதி,
(1) தேம்ஸ் நதி (2) நைல் நதி (3) மகாவலி நதி (4) ரைநன் நதி

[.....]

39. இடைவெப்பவலயத்தில் அமைந்திருப்பது,
(1) கடகக் கோட்டிலிருந்து மத்திய கோடு வரை
(2) மரகக் கோட்டிலிருந்து மத்திய கோடு வரை
(3) கடகக் கோட்டிலிருந்து ஆட்டிக் வரையிலும், அந்தாட்டிக் வட்டத்திலிருந்து மரகக் கோடு வரையிலும்
(4) ஆட்டிக், அந்தாட்டிக் வட்டம் மற்றும் வட முனைவு, தென் முனைவுகளுக்கிடையிலான பகுதி

[.....]

40. உலக காலநிலை பகுபாகுபாட்டில் முதன்மையான காலநிலையியலாளர்கள்,
(1) டஸ்பின் மில்லர், அனெக்சிமான்டர், அல்பரட் உவெக்னர்
(2) தோன்வைட், அனெக்சிமான்டர், டஸ்டின் மிலர்
(3) அல்பிரட் உவெக்னர், டஸ்டின் மில்லர், தோன்வைட்
(4) டன்டின் மில்லர், தோன்வைட், கொப்பன்

[.....]

www.lkedu.lk

# தி/கிண்/இஹ்ஸானியா பெண்கள் வித்தியாலயம்


## முதலாம் தவணைப்பரீட்சை - 2020

| தரம் : 11 | புவியியல் II | நேரம் : 02 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண் : | | புள்ளி : |

பகுதி – II

- முதலாம் வினா கட்டாயமானது.
- முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. **அ.** கீழே வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினை நன்கு அவதானித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.




www.tkedu.lk

I. படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள A, B, C ஆகிய நதிகளுள் ஓப் நதியினைக் குறிக்கும் எழுத்து எது?

II. படத்தில் D, E, F ஆகிய எழுத்துக்களில் அந்தீஸ் மலைத்தொடரினைக் குறிக்கும் எழுத்து எது?

III. படத்தில் G, H, J ஆகிய கடல்களில் மத்திய தரைக் கடலைக் குறித்துக் காட்டும் எழுத்து எது?

IV. தற்போது உலகில் முதன்முதலாக "covid 19" நோய் தொற்றுக்குள்ளான நாடான "சீனா" வினை குறிக்கும் எழுத்து எது?

V. கம்சட்கா குடா நாட்டினை குறிக்கும் எழுத்து எது?

(5 புள்ளிகள்)

**ஆ. பின்வரும் இடங்களை இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.**

(i) மன்னார் தீவு (ii) களனி கங்கை (iii) சிங்கராஜவனம் (iv) கேகாலை மாவட்டம் (v) அம்பந்தோட்டை

(5 புள்ளிகள்)

02. (i) புவியின் பிரதான தொகுதி / கோளங்கள் நான்கினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
(ii) இவற்றிற்கிடையேயான இடைத்தொடர்புகளை சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)

(iii) மனிதன் கற்கோளத்தைப் பயன்படுத்தும் போது அதற்கேற்படும் பாதிப்புக்கள் மூன்றினை உதாரணங்கள் மூலம் விளக்குக. (5 புள்ளிகள்)

03. (i) புவியில் நீர் காணப்படும் முறைகள் இரண்டினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
(ii) நீர் மாசடைதலில் செல்வாக்குச் செலுத்தும் மனிதச் செயற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
(iii) பிரதான செயற்பாடுகள் மூன்றின் மூலம் நீரியல் வட்டத்தை விளக்குக. (5. புள்ளிகள்)

04. (i) வளிமண்டலத்தின் பிரதான படைகள் நான்கினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
(ii) மாறன் மண்டலத்தின் விசேட பண்புகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
(iii) (a) வளிக்கோளத்தின் மூலம் மனிதன் பெறும் பயன்கள் மூன்று தருக.
(b) வளி மாசடைதலை இழிவளவாக்கக் கூடிய முறைகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளிகள்)

05. (i) புவிமேற்பரப்பில் காணக்கூடிய பௌதிக தரைத்தோற்ற அம்சங்கள் மூன்று தருக. (2 புள்ளிகள்)
(ii) ஆசியாக் கண்டத் தகட்டினுள் அமைந்திருக்கும் ஒரு தீவு, அவுஸ்திரேலியக் கண்டத் தகட்டிலிருக்கும் ஒரு தீவு, ஆபிரிக்கக் கண்டத் தகட்டிலிருக்கும் ஒரு தீவு என்பவற்றைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)
(iii) சமுத்திரங்கள், கடல்கள் என்பன மனிதனால் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் மூன்றினை விளக்குக.
(5 புள்ளிகள்)

06. (i) உயிர்க்கோளம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)
(ii) உயிர்க்கோளத்தின் எல்லைகள் மூன்றினையும் எழுதுக. (3 புள்ளிகள்)
(iii) உயிர்க்கோளத்தின் நிலைத்திருப்பில் மனிதனின் தலையீடு / செயற்பாடுகள் செல்வாக்குச் செலுத்தும் மூன்று விடயங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக. (5 புள்ளிகள்)

07. (i) மாதிரிப் பூகோளமொன்றில் உலகின் பிரதான காலநிலை வலயங்களை வரைந்து பெயரிடுக (4புள்ளிகள்)
(ii) அயன வலயத்தின் எல்லைகளைத் தருக..
(3 புள்ளிகள்)
(iii) இடைவெப்ப வலயத்தின் எல்லைகளைத் தருக.
(3 புள்ளிகள்)

www.ikedu.lk

www.lkedu.lk